WORLD SAIVA COUNCIL (AUSTRALIA) INC.
உலக சைவப் பேரவை (அவுஸ்திரேலியா)
Postal Address: 6, Dudley Street, Auburn, NSW 2144
Tel: 0408 432 680 email: sabanathank@gmail.com

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு-21

ஆசிரியர்: சைவப்புலவர் முரு.சேமகரன்

(கவிஞர் கல்லோடைக் கரன்)

15-04-2026

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு-21, 08-04-2026

தொல்:சொல்: வேற்றுமை மயங்கியல் -தொடர்ச்சி

சென்ற வகுப்பில் ஐ, ஆன், இன் போன்ற சில வேற்றுமை உருபுகள் எவ்வாறு மயங்கின என்று ஓரளவு கற்றுக் கொண்டோம், இவ் வகுப்பில் மேலும் சில மயக்கங்களைப் பார்ப்போம்.

1

உடைமைப் பொருளில் வரும் 'அது' என்ற ஆறாமுருபு, 'கு' வாகி வந்து மயங்குந் தன்மையை இந் நூற்பா விளக்குகிறது.

"அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகை வயின், அதுவென் உருபு கெடக் குகரம் வருமே"(94)

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு-21, 08-04-2026
தொல்:சொல்: வேற்றுமை மயங்கியல் -தொடர்ச்சி

இ-ள்:

ஆறாம் வேற்றுமைப் பொருள்மேல் வரும் உயர்திணைத் தொகைக் கண் உருபு விரிப்புழி, 'அது' வெனும் உருபு கெட, அதன் பொருட்கண் நான்காமுருபு வரும் எ-று

எ-டு:

'நம்பி மகள் வள்ளி', இது உடைமைப் பொருளாதலின், அத் தொகையை விரிக்க ' நம்பியது மகள் ' எனவரும். அதனை 'அது' உருபுகெட ' நம்பிக்கு மகள் வள்ளி ' என விரியும். ஏனெனில் 'அது' அஃறிணைப் பால் வருமென்பதால், உயர்திணைக்கண் 'கு' உருபேற்கும் என்றதனாலாகும்.

2 பல உருபுகள் தொடர்ந்து அடுக்கி வந்தும் மயங்கும் என்பதை இது விளக்குகிறது:

"உருபு தொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி
ஒருசொன் னடைய பொருள்சென் மருங்கே"(102)

எ-டு:

தினையின் நுனிக்கண் கிளியைக் கண்டான். இவ் வாக்கியத்தில் 3 உருபுகள் அடுக்கி வந்தன.

"அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்" (குறள், 543)

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு-21, 08-04-2026

தொல்:சொல்: வேற்றுமை மயங்கியல் -தொடர்ச்சி

"இறுதியும் இடையும் எல்லா வுருபும் நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார் "

இ-ள்: வேற்றுமைத் தொடர் இறுதிக்கண்ணும், அதனிடையிலும் ஆறு உருபுகளும் தத்தமக்கு ஓதிய பொருளில் நிற்கும் எ-று

எ-டு: ..கடந்தான் நிலத்தை.

..வந்தாள் கணவனொடு.

..கொடுத்தான் ஏழைக்கு.

..வலியன் பீமனின்.

..ஆடை பெண்ணது. (இவை இறுதியில் வந்தவை)

..பெண்ணினது சேலை..

..குன்றத்துக்கண் முருகன்..

(இவை இடையில் வந்தவை)

4 ஆகு பெயர்கள் பற்றி ஈண்டுரைப்பது யாவையெனக் காண்போம். ஒன்றன் இயற்பெயர், அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்குத் தொன்றுதொட்டுப் பெயராக வழங்கி வருவதும், அவ்வாறு ஒன்று மற்றொன்றுக்கு ஆகிவருவதும் ' ஆகு பெயர்' எனப்படும்.

"முதலிற் கூறும் சினையறி கிளவியும்
சினையிற் கூறும் முதலறி கிளவியும்
பிறந்த வழிக் கூறலும் பண்புகொள் பெயரும்
இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்
வினைமுத லுரைக்கும் கிளவியொடு தொகைஇ
அனைய மரபினவே ஆகுபெயர்க் கிளவி" (114)

இ-ள்:

(இவற்றின் பொருளை விரித்து, எடுத்துக் காட்டுகளைப் நோக்க, இந் நூற்பாவின் பொருள் விளங்கும்)

எ-டு: 1.

முதலாகு பெயர் --

முதற் பொருளின் பெயர் சினைப் பொருளுக்கு ஆகி வருவது இது:

'மல்லிகை மணம் வீசியது'

இங்கு மல்லிகை முதற் பொருளாகிய மரம். பூ சினைப் பெயர். இது பொருளாகுபெயர் எனினும் ஒக்கும்.

இ-ள்:

(இவற்றின் பொருளை விரித்து, எடுத்துக் காட்டுகளைப் நோக்க, இந் நூற்பாவின் பொருள் விளங்கும்)

எ-டு: 2. சினையாகு பெயர் --

சினைப் பொருளின் பெயர், முதற் பொருளுக்கு ஆகி வருவது.

'வெற்றிலை நட்டான்' -

வெற்றிலை வெற்றிலைக் கொடிக்கு ஆகி வந்தது.

3. **இடவாகு பெயர்** --

ஓர் **இடத்தின் பெயர்**, அங்குள்ள **பொருளுக்கு** ஆகி வருவது.

' **உலகம்** விழித்தது '

இங்கு **உலகம்** என்றது அங்கு வாழும் மக்களுக்கு ஆகி வந்தது.

4. **பண்பாகு பெயர்** --

ஒரு பண்பின் பெயர் அப் பண்பையுடைய பொருளுக்கு ஆகி வருவது இது.

'**மஞ்சள்** பூசினாள்'

இங்கு **மஞ்சள் நிறம்**, **மஞ்சள் கிழங்கிற்கு** ஆகி வந்தது.

5. **காரணாகு பெயர்** --

ஒன்றுக்குக் **காரணமாய் அமைந்த** பொருள், அதனாலான காரியத்திற்கு ஆகி வருவது இது.

'**சூரியன்** சுட்டான் '

சூரியனின் கதிர், சூரியனுக்கு ஆகி வந்தது.

6. இருபெயரொட்டாகு பெயர் --

இரு ஒத்த பொருட் பிற சொற்கள், ஒரு பொருளைக் குறிக்க ஆகி வருவது இது.

'சாரைப் பாம்பு'

இங்கு சாரை, பாம்பு என்ற ஒத்த பொருள் இரு பெயர் ஒட்டி வந்து ஒரு பாம்பைக் குறித்தன.

7. கருத்தாவாகு பெயர் --

கருத்தாவான செய்தவனின் பெயர், அவனாற் செய்யப்பட்ட பொருளுக்கு ஆகி வருவது இது.

' **வள்ளுவன்** படித்தேன் '

'**சேக்கிழார்** கற்றேன் '

இங்கு **வள்ளுவனும்**, **சேக்கிழாரும்** அவர்கள் செய்த **நூல் என்ற பொருளுக்கு** ஆகி வந்தது.

- இவ் வகுப்பு நிறைவு -

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு-21, 08-04-2026
தொல்:சொல்: வேற்றுமையியல் -தொடர்ச்சி

ஐயம் தெளிதல்